**சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்**
CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை
நிர்வாக அலுவலகம் : எண்.24-B, காந்தி நகர், கும்பகோணம் - 612 001, மின்னஞ்சல் : crmd@cityunionbank.in
போன் : 0435-2432322, ஃபேக்ஸ் : 0435-2431746

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல்/நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002ன் படி
டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அறிவிப்பு

சிட்டி யூனியன் வங்கியின் கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்களாகிய (1) திருமதி.T.லீலாவதி, க/பெ.தங்கராஜ், எண்:3/50, வன்னிகுடி, கீழபழசாலை போஸ்ட், கரிசல்குளம் வழி, மானாமதுரை, சிவகங்கை - 630606, மேலும் : திருமதி.T.லீலாவதி, க/பெ.தங்கராஜ், 69/D-15, அன்பு நகர், மானாமதுரை, சிவகங்கை - 630606, (2) திரு.K.பூமிநாதன், த/பெ.காட்டுராஜன், கதவு எண்.4/427, கமுதி சாலை, மேலபார்திபனூர், பரமகுடி தாலுகா, ராமநாதபுரம்-623608. (3) திரு.தங்கராஜ், த/பெ.காட்டுராஜன், கதவு எண்.3/50, வன்னிகுடி, கீழபழசாலை போஸ்ட், கரிசல்குளம் வழி, மானாமதுரை, சிவகங்கை - 630606, மேலும் : திரு.தங்கராஜ், த/பெ.காட்டுராஜன், 69/D-15, அன்பு நகர், மானாமதுரை, சிவகங்கை -630606 ஆகியோர் பெற்ற கடன் நிலுவைத் தொகை 21-01-2025 அன்றுள்ளபடி ரூ. 11,26,022/- (ரூபாய் பதினோரு லட்சத்து இருபத்து ஆறாயிரத்து இருபத்து இரண்டு மட்டும்) மற்றும் 22-01-2025 முதல் பின்வட்டி மற்றும் வங்கிக்கு சேரவேண்டிய வேறு ஏதேனும் பாக்கிகள், இதர செலவுகள் ஆகிய மொத்த தொகையை வசூலிக்கும் பொருட்டு வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட சொத்து 2002ஆம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம், விதி 8(6)&9-ன் கீழ் சிட்டி யூனியன் வங்கியின் அதிகாரபூர்வ அதிகாரி அவர்களால் சீலிடப்பட்ட டெண்டருடன் கூடிய ஏல விற்பனை அடிப்படையில் விற்பனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வங்கிக்கு அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்தின் விவரம்
ஷெட்யூல் - A
சொத்து - 1: (தங்கராஜ் மனைவி திருமதி.T.லீலாவதி-க்கு சொந்தமான சொத்து)

மானாமதுரை, சிவகங்கை மாவட்டம், சிவகங்கை பதிவு மாவட்டம் மானாமதுரை துணை பதிவாளர் அலுவலகம், மானாமதுரை தாலுகா, மானாமதுரை குரூப், மானாமதுரை கிராமம், நடாமி வயல், தற்போது மானாமதுரை டவுன், கீழ்கரை, பழைய வார்டு எண். 13, புதிய வார்டு எண்.1, அன்பு நகர் சேகரம், அண்ணாமலை நகர், தற்போது சப்-டிவிஷன் புதிய பட்டா எண்.136, சர்வே எண்:12/1A, பரப்பளவு:- 1,105 சதுர அடி, தற்போதுள்ள அனைத்து துண்டுநிலம் பாகங்களும் மற்றும் இனி கட்டப்பட இருக்கும் சூப்பர்ஸ்ட்ரக்சருடன். சொத்தின் எல்லைகள்:- வடக்கில் : 20 அடி அகல கிழக்கு-மேற்கான பொதுவான நடைபாதை, தெற்கில் : முத்துக்கருப்பனுக்கு சொந்தமான நஞ்சை நிலம், கிழக்கில் : சகுந்தலா வாங்கிய பிளாட் எண்:58, மேற்கில் : கலையரசன் வாங்கிய காலி மனை. அளவுகள்:- கிழக்கு-மேற்காக வடக்கு பக்கம் : 26 அடி, கிழக்கு-மேற்காக தெற்கு பக்கம் : 26 அடி, வடக்கு-தெற்காக கிழக்கு பக்கம் : 43 அடி, வடக்கு-தெற்காக மேற்கு பக்கம் : 42 அடி, மொத்த பரப்பளவு :1,105 சதுர அடி கொண்டது.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ. 23,00,000/-
(ரூபாய் இருபத்து மூன்று லட்சம் மட்டும்)

டெண்டருடன் கூடிய ஏல விற்பனை விவரம்
டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதி : 10-03-2025
இடம் : சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், அலங்காநல்லூர் கிளை, எண்.23/65 மாரியம்மன் கோவில் தெரு, மானாமதுரை, சிவகங்கை-630606, தொலைபேசி எண். 04574-268450, செல் எண் : 9360585112

டெண்டருடன் கூடிய ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்
(1) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் ஏலத்தில் பங்கு கொள்ள நேரில் ஆஜராக வேண்டும் மற்றும் தனக்காகவே ஏலம் கேட்பதாக எழுத்துபூர்வமான ஒரு உறுதிமொழியினையும் அளிக்க வேண்டும். (2) விருப்பமுடைய டெண்டர்தாரர்/ஏலம் கேட்க விரும்புவோர், டெண்டர் படிவங்களை மேனேஜர், சிட்டி யூனியன் வங்கி லிமிடெட், மானாமதுரை கிளை, எண்.23/65 மாரியம்மன் கோவில் தெரு, மானாமதுரை, சிவகங்கை - 630606 -ல் பெற்றுக்கொள்ளலாம். (3) விருப்பமுடைய டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் தங்களது விலைப்புள்ளிகளை நிர்ணயிக்கப்பட்ட டெண்டர் படிவத்தில் சீலிடப்பட்ட உறைகளில் வைத்து, அத்துடன், "சிட்டி யூனியன் பேங்க்" என்ற பெயரில் பெறப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட/குறைந்தபட்ச விலையின் 10% தொகைக்கான Pay Order/கேட்பு வரைவோலையினை பிணை வைப்புத் தொகையாக இணைத்து "அதிகாரபூர்வ அதிகாரி, சிட்டி யூனியன் வங்கி லிமிடெட்" என முகவரியிட்டு, இந்த அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதியன்று நண்பகல் 12.00 மணி அல்லது அதற்கு முன்னதாக சமர்ப்பிக்க வேண்டும். (4) விருப்பமுள்ள டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் சொத்தினை பார்வையிடவும் மற்றும் இதர விவரங்களுக்கும் தொலைபேசி எண். 04574-268450, செல் எண் : 9360585112 ஐ தொடர்பு கொள்ளவும். (5) இந்த சொத்து(க்கள்) "இருக்கின்ற இடத்தில்", "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். (6) சீலிடப்பட்ட டெண்டர்கள் விருப்பமுள்ள ஆஜராகியுள்ள டெண்டர்தாரர்கள் முன்னிலையில் இந்த அறிவிக்கப்பட்டுள்ள டெண்டருடன் கூடிய ஏல விற்பனை தேதியன்று பிற்பகல் 01.00 மணிக்கு திறக்கப்படும். பொதுவாக, மூடப்பட்ட நிலையிலான டெண்டர் விற்பனையாக இருந்த போதிலும், மூடப்பட்ட நிலையிலான டெண்டரில் குறிப்பிடப்பட்டுள்ள விலைப்புள்ளியைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோர விரும்புவோர்களின் விருப்பத்தின் பேரில் அதிகாரபூர்வ அதிகாரியின் கட்டளையின் பேரில், வெளிப்படையான திறந்த ஏலத்தினை நடத்திடலாம். இந்த நிலையில், அதிகபட்ச ஏலம் கோருபவருக்கே இந்த விற்பனை வழங்கப்படும். எனினும், இந்த விற்பனை சிட்டி யூனியன் வங்கியினால் உறுதி செய்யப்பட வேண்டும். (7) வெற்றிபெறும் டெண்டர்தாரர் / ஏலம் கேட்பவர் விற்பனை விலையில் 25% தொகையை (பிணைவைப்புத் தொகை செலுத்தியது உள்பட) விற்பனை உறுதி செய்யப்பட்ட உடனேயே செலுத்த வேண்டும். மீதி 75% தொகையை விற்பனை உறுதி செய்யப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள்ளாக செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்டபடி செலுத்தத் தவறினால் அவரால் செலுத்தப்பட்ட 25% தொகை முழுவதையும் அவர் இழக்க நேரிடும். (8) குறிப்பிடப்பட்டுள்ள காலவரையறைக்குள் மொத்த விற்பனை தொகையையும் பெற்றுக் கொண்ட பின்னரே, வெற்றி பெற்ற டெண்டர்தாரர் / ஏலதாரருக்கு அதிகாரபூர்வ அதிகாரியால் விற்பனை சான்றிதழ் (Sale Certificate) வழங்கப்படும். (9) பத்திர செலவு, பதிவுக் கட்டணம், சட்டப்படியான மற்ற செலவுகளை வெற்றிபெற்ற ஏலம்கேட்டவரே ஏற்க வேண்டும். (10) அரசு, அரசு நிறுவனம் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கான சொத்து சம்பந்தப்பட்ட சட்டபூர்வ வீட்டு வரி, மின்சாரக் கட்டணம், TDS, GST மற்றும் இதர பாக்கிகளை வெற்றிபெறும் ஏலம்கேட்டவரே செலுத்த வேண்டும். (11) எந்தவித காரணமும் கூறாமல் விலைப்புள்ளிகளை ஏற்க அல்லது நிராகரிக்க அல்லது விற்பனையை ரத்து செய்ய அதிகாரபூர்வ அதிகாரிக்கு முழு உரிமை உண்டு.

இடம் : கும்பகோணம், தேதி : 28-01-2025 அதிகாரபூர்வ அதிகாரி

பதிவு அலுவலகம் : எண்.149, T.S.R. (பெரிய) தெரு, கும்பகோணம், தஞ்சாவூர் மாவட்டம், தமிழ்நாடு - 612 001, CIN - L65110TN1904PLC001287,
போன் : 0435-2402322, ஃபேக்ஸ் : 0435-2431746, இணையதளம் : www.cityunionbank.com



SOUTH INDIAN Bank EXPERIENCE NEXT-GEN BANKING
தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்: முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

**இ- ஏல விற்பனை அறிவிப்பு**

Ref: RO/SAR/SN/134/2024-25 தேதி: 27.01.2025

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

| | |
|---|---|
| 1) திரு. S. இமாம் அஹமது ஹுசைன், [M/s. சிராஜ் மில்க் ஏஜென்சி உரிமையாளர்], எண்.2/1, M.K. காம்ப்ளக்ஸ், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர், திண்டுக்கல்-624002, தமிழ்நாடு. மேலும் இருப்பிடம்: கதவு எண்.85, ஜின்னா நகர், மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல் - 624002, தமிழ்நாடு. | 2) திருமதி. I. கௌஸியா, எண்.85, ஜின்னா நகர், மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல் - 624002, தமிழ்நாடு. மேலும் இருப்பிடம்: எண்.2/1, M.K. காம்ப்ளக்ஸ், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர், திண்டுக்கல் - 624002, தமிழ்நாடு. |

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., திண்டுக்கல் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 02.01.2025 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்., திண்டுக்கல் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.69,73,908.95-ஐ (ரூபாய் அறுபத்தொன்பது லட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து எட்டு மற்றும் பைசா தொண்ணூற்றி ஐந்து மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே","அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 26.02.2025 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| சொத்தின் உரிமையாளர் பெயர் | லாட் எண்.1: திருமதி. I. கௌஸியா<br>லாட் எண்.2: திரு. S. இமாம் அஹமது ஹுசைன் |
| சொத்து விபரம்: லாட் எண்.1: திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, பிள்ளையார்நத்தம் கிராமம், S.No.82/1, Re.S.No.82/1B3-ன்கீழ் அமைந்துள்ள 62 செண்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், வண்டிப்பாதை மற்றும் நடைபாதை உரிமைகள், தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் பிற உபகரணங்கள் ஆகியவற்றுடன் சேர்த்து திருமதி. I. கௌஸியா என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, நாகல்நாயக்கன்பட்டி சார்பதிவகத்தில் 22.08.2019 தேதியில் பதிவுபெற்ற தானசெட்டில்மெண்ட் பத்திர எண்.4175/2019-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: வடக்கே: S.No.82/1-லுள்ள 259 செண்ட் இடத்தில் 58.5 செண்ட் அளவுள்ள சொத்து, கிழக்கே: S.No. 82/A-லுள்ள சொத்து, தெற்கே: S.No.83 & 83/3-லுள்ள சொத்து, மேற்கே: வடக்கு-தெற்காக வண்டிப்பாதை.<br>லாட் எண்.2: திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, படியூர்கிராமம், சர்வே எண்.1277/10B-ன்ன 4800 சதுரடி [1200 சதுரடி+1200 சதுரடி+1200 சதுரடி+1200 சதுரடி] அளவில் பிளாட் எண்கள், 5, 6, 11 & 12 ஆகியவற்றின் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், நடைபாதை மற்றும் வண்டிப்பாதை உரிமை, தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் சேர்த்து திரு. S. இமாம் அஹமது ஹுசைன் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, வடமதுரை சார்பதிவகத்தில் 24.12.2018 தேதியிட்ட விற்பனைப்பத்திரப் பதிவெண்.5095/2018-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.5-ன் எல்லைகள்: வடக்கே: பிளாட் எண்.12, கிழக்கே: பிளாட் எண்.6, தெற்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, மேற்கே: சர்வே எண்.1277/9D-லுள்ள சொத்து. 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.6-ன் எல்லைகள்: வடக்கே: பிளாட் எண்.11, கிழக்கே: பிளாட் எண்.7, தெற்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, மேற்கே: பிளாட் எண்.5. 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.11-ன் எல்லைகள்: வடக்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, கிழக்கே: பிளாட் எண்.10, தெற்கே: பிளாட் எண்.6, மேற்கே: பிளாட் எண்.12. 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.12-ன் எல்லைகள்: வடக்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, கிழக்கே: பிளாட் எண்.11, தெற்கே: பிளாட் எண்.5, மேற்கே: சர்வே எண். 1277/9D-லுள்ள சொத்து. | |
| நிர்ணயிக்கப்பட்ட தொகை | லாட் எண்.1: ரூ.36,16,200/- (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து பதினாறாயிரத்து இருநூறு மட்டும்)<br>லாட் எண்.2: ரூ.16,80,000/- (ரூபாய் பதினாறு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) |
| முன் வைப்புத் தொகை (EMD) | லாட் எண்.1: ரூ.3,61,620/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபத்தோராயிரத்து அறுநூற்றி இருபது மட்டும்)<br>லாட் எண்.2: ரூ.1,68,000/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தெட்டாயிரம் மட்டும்) |
| ஏல அதிகரிப்புத் தொகை | ரூ.50,000/- |
| இ-ஏல நேரம் மற்றும் தேதி | 26.02.2025 அன்று 02:00 PM முதல் 03:00 PM வரை (5 நிமிடம் தன்நீட்சியுடன் விற்பனை முடியும் வரை) |
| வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள் | லாட் எண்.1: 30.03.2022 முதல் 31.07.2024 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை.<br>லாட் எண்.2: 19.02.2019 முதல் 04.07.2024 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. |

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தி சௌத் இந்தியன் வங்கி லிட்.(Secured Creditor)-ன் இணையதளம் அதாவது www.southindianbank.com-ல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும். https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.
சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ (Ph. No. 0452 2300205/9894647220) அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட்., திண்டுக்கல் கிளையின் மொபைல் எண். 8056531536-ல் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

இடம்: மதுரை அங்கீகாரம் பெற்ற அலுவலர்



உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com


# நியாய விலைக் கடை பணியாளர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்



தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நியாய விலைக் கடை பணியாளர் சங்கம் சார்பில், செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர்.

**தேனி, ஜன. 28:** தேனியில் தமிழ்நாடு நியாய விலைக் கடை பணியாளர் சங்கம் சார்பில் கூட்டுறவுப் பண்டகச் சாலை நிர்வாக முறைகேடுகளைக் கண்டித்து செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்டத் தலைவர் மகாலிங்கம் தலைமை வகித்தார். மாவட்ட சிறப்புத் தலைவர்கள் பன்னீர்செல்வம், அழகர்சாமி, மாவட்டச் செயலர் அய்யனார், நிர்வாக அமைப்புச் செயலர் ஜெயப்பிரகாஷ், மாவட்ட போராட்டக் குழுத் தலைவர் குருசாமி, மாநிலப் பொருளாளர் பொன்.அமைதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் திருச்சி அமராவதி மொத்த கூட்டுறவுப் பண்டகச் சாலை, திருவெறும்பூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், மால்வாய் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம், ஆலங்குடி மகாஜனம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள நிர்வாக முறைகேடுகள், பணியாளர் விரோதப் போக்கு ஆகியவற்றை கண்டித்து முழக்கமிட்டனர்.

கூட்டுறவுச் சங்கங்களில் முறைகேடுகளைக் களைய வேண்டும். பணியாளர்கள் மீது போடப்பட்ட பொய் வழக்கு, ஒழுங்கு நடவடிக்கை ஆகியற்றை ரத்து செய்ய வேண்டும். பணியாளர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் வருங்கால வைப்பு நிதியை வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் முறையாக செலுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாநில சிறப்புத் தலைவர் கு.பாலசுப்பிரமணியன் பேசினார்.

# அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பிப்.4 முதல் மதிப்பீட்டுத் தேர்வு

**திண்டுக்கல், ஜன. 28:** அரசு, அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் 3, 5, 8-ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் திறனை மதிப்பீடு செய்ய வரும் பிப்.4, 5, 6-ஆம் தேதிகளில் தேர்வு நடைபெறுகிறது.

தமிழகத்தில் அரசு, அரசு உதவிப் பெறும், பகுதி உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் திறனை மதிப்பீடு செய்வதற்காக, அரசுத் தரப்பில் மாநில அளவிலான அடைவு ஆய்வு நடத்த முடிவெடுக்கப்பட்டது. இதன்படி, அரசு, அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் 3, 5, 8-ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு இந்த மதிப்பீட்டுத் தேர்வு நடத்தப்படுகிறது. 3-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வரும் பிப்.4-ஆம் தேதியும், 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வரும் 5-ஆம் தேதியும், 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 6-ஆம் தேதியும் இந்தத் தேர்வு நடைபெறுகிறது.

3-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 35 வினாக்களும், 5-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 45 வினாக்களும், 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு 50 வினாக்கள் வீதம் வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதேபோல, அடைவு ஆய்வு, மத்திய அரசு சார்பில் அகில இந்திய அளவில் கடந்த சில நாள்களுக்கு முன்பு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# வேன் மோதியதில் பள்ளி மாணவர் உயிரிழப்பு

**நத்தம், ஜன. 28:** சாணார்பட்டி அருகே திங்கள்கிழமை சரக்கு வேன் மோதியதில் பள்ளி மாணவர் உயிரிழந்தார்.

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அருகேயுள்ள நொச்சி ஓடைப்பட்டியைச் சேர்ந்த பழனிசாமி மகன் சரவணக்குமார் (15). இவர் கொசவபட்டியில் உள்ள தனியார் பள்ளியில் 10-ஆம் வகுப்பு படித்து வந்தார்.

இவர் மிதிவண்டியில் நொச்சி ஓடைப்பட்டியிலிருந்து நத்தம் சாலையில் சென்றபோது, எதிரே வந்த சரக்கு வேன் இவர் மீது மோதியது. இந்த விபத்தில் பலத்த காயமடைந்த இவர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு, அவர் உயிரிழந்தார்.

இதுகுறித்து சாணார்பட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# தேனி திமுக அலுவலகத்தில் மடிக் கணினிகள் திருட்டு

**தேனி,ஜன.28:** தேனியில் திமுக அலுவலகத்திலிருந்த மடிக் கணினிகள் திருடு போனதாக செவ்வாய்க்கிழமை, காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது.

தேனி, என்.ஆர்.டி..நகரில் திமுக வடக்கு மாவட்ட, நகர அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலகத்தில் மர்ம நபர்கள் பூட்டை உடைத்து 2 மடிக் கணினிகளைத் திருடிச் சென்றனர்.

இதுகுறித்து தேனி காவல் நிலைய போலீஸார் வழக்கு பதிந்து, கட்சி அலுவலகத்திலிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்வையிட்டு விசாரித்து வருகின்றனர்.

**மற்றொரு சம்பவம்:** அரண்மனைப்புதூர், சத்திரப்பட்டி சாலை பகுதியைச் சேர்ந்த ஆசைத்தம்பி மனைவி லோகமணி. இவர், வீட்டைப் பூட்டிவிட்டு சாவியை பால்கனி அருகேயுள்ள ஜன்னலில் வைத்து விட்டு குடும்பத்தினருடன் திருச்செந்தூர் சென்றார்.

வீட்டுக்குத் திரும்ப வந்து பார்த்த போது, அறையிலிருந்த பீரோ உடைக்கப்பட்டு ஆறரை பவுன் தங்க நகைகள் திருடுபோனது தெரியவந்தது.

இதுகுறித்து பழனிசெட்டிபட்டி காவல் நிலைய போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.


HDFC BANK **ஹெச்.டி.எஃப்.சி பேங்க் லிமிடெட்**
கிளை : நெ.406, சக்தி சிவம் பிளாசா, பம்பிங் ஸ்டேஷன் ரோடு, 9-வது கிராஸ், கே.கே.நகர் (கிழக்கு), மதுரை-625020 CIN L65920MH1994PLC080618 Website: www.hdfcbank.com.

**சொத்தினை கையகப்படுத்துதல் அறிவிப்பு**

2002 - ம் ஆண்டின் செக்யூரடைசேஷன் அண்டு ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்டு என்போர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் சட்டத்தின் பிரிவு 13 (12) மற்றும் 2002 - ம் ஆண்டின் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) ரூல்சின் விதி 3-ன் கீழ் ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட் (அங்கீகரிக்கப்பட்ட ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் மாண்புமிகு NCLT- மும்பையால் 17 மார்ச் 2023 தேதியிட்ட உத்தரவின்படி முந்தைய ஹெச்.டி.எஃப்.சி லிமிடெட், ஹெச்.டி.எஃப்.சி வங்கி லிமிடெட்டுடன் இணைக்கப்பட்டுள்ளது) (ஹெச் டி எஃப் சி) நிறுவனத்தால், அதிகாரம் பெற்ற அதிகாரியாக (ஆதரைஸ்டு ஆபீசர்) நியமிக்கப் பட்டவர், கேட்புத் தொகை அறிவிப்பு (டிமாண்ட் நோட்டீஸ்) விடுத்து அதன் மூலம் கீழே விவரிக்கப்பட்டுள்ள கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) - க்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கடன் ஒப்பந்தத்தில் கண்டுள்ள வட்டி விகிதத்தில் மேற்கால வட்டி மற்றும் இதர செலவுகளுடன் அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என்று கோரினார்.

| வ. எண். | கடனாளர் பெயர் (கள்)/ சட்டப்படியான வாரிசு (கள்) சட்டப்படியான பிரதிநிதி (கள்) பெயர்கள் | மொத்த கடன் நிலுவைத் தொகை | கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி | ஈடு பெற்ற சொத்து விபரம் (அசையா சொத்து) |
|---|---|---|---|---|
| (a) | (b) | (c) | (d) | (e) |
| 1. | கடனாளர் :<br>1.திரு.பாலசுப்ரமணியன்<br>A/c No: 679011610,683647094<br>2.திரு.சக்திவேல்<br>3. திருமதி. காளியம்மாள்<br>பிளாட் எண்.9, ச.எண்.555/4, செட்டிநாயக்கன்பட்டி, திண்டுக்கல் - 624004. | 31 ஆகஸ்ட் 2024* வரை ரூ.18,72,407/- கேட்புத் தொகை அறிவிப்புத் தேதி 17 அக்டோபர் 2024 | 25 ஜனவரி 2025 - Symbolic | திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் இணை சார்பதிவு மாவட்டம், திண்டுக்கல் தாலுக்கா, செட்டிநாயக்கன்பட்டி கிராமம், சர்வே எண். 555/3-ல் அமையப்பெற்ற 43 செண்ட், சர்வே எண். 555/4-ல் அமையப்பெற்ற 47 செண்ட், ஆக மொத்தம் 90 செண்ட் இடமானது ப்ளாட்களாக உருவாக்கப்பட்டதில் உள்ள ப்ளாட் எண். 9 என்ற சைட் மற்றும் கட்டிட பரப்பு. இதன் எல்லைகளாவன வடக்கு : ஆனந்தனுக்கு சொந்தமான ப்ளாட் எண். 8, கிழக்கு : ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் சொத்து, தெற்கு : ஓடை, மேற்கு : தெள்வடல் சாலை, அளவீடுகளாவன -கிழமேல் இருபுறமும் 50 அடி., தென்வடல் கிழக்கு புறம் 51 அடி., மேற்கு புறம் - 44¾ அடி., என மொத்தம் 2394 சதுர அடி. இச்சொத்து நத்தம் சர்வே எண். 555/3I, 555/4H-ல் அமைந்துள்ளது. |

*திரும்ப செலுத்தும் நாள் / சொத்தினை பணமாக்கும் வரையில் ஏற்படும் செலவுகள், கட்டணங்களும் சேர்த்து.
கடனாளர்(கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) கேட்புத் தொகையினைச் செலுத்தத் தவறியதால் இச்சட்டப்பிரிவு 13 (4) மற்றும் மேற்படி ரூல்சின், விதி 8 -ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அடிப்படையில் கீழே கையொப்பமிட்டுள்ளவர் விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கையகப்படுத்தி சுவாதீனம் பெற்றார் என்று கடனாளருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.
எனவே இதில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் சம்பந்தமாக, குறிப்பாக கடனாளர் (கள்) / சட்டப்படியான வாரிசு (கள்) / சட்டப் பிரதிநிதி (கள்) - ளும், மற்றும் பொதுமக்களும் எந்த விவகாரங்களிலும் ஈடுபடக்கூடாது என எச்சரிக்கப்படுவதோடு அப்படி ஈடுபடும் விவகாரங்களானவை ஹெச் டி எஃப் சி பேங்க் லிமிடெட் -யிடம் உள்ள அடமானம் மற்றும் அவருக்கு நேரே கொடுக்கப்பட்டுள்ள தொகைக்கும் மேற்கால வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் உட்பட்டதாகும். சட்டத்தின் பிரிவு 13-ன் உட் பிரிவு (8) ன் படி அடமானம் பெற்ற கடனாளர் சொத்தினை மீட்டுக் கொள்வதற்கான கால அளவு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

தேதி : 29 - ஜனவரி - 2025
இடம் : மதுரை
பதிவு அலுவலகம் : HDFC பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல் (மேற்கு), மும்பை - 400013
HDFC பேங்க் லிமிடெட்டிற்காக ஒப்பம் அதிகாரம் பெற்ற அதிகாரி







# கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் மலர்ச் செடி நாற்றுகள் நடவுப் பணி



கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் நடைபெற்ற டேலியா மலர்ச் செடிகள் நடவுப் பணி.

**கொடைக்கானல், ஜன. 28:** கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் சீசனுக்காக ஆறாயிரம் டேயிலா மலர்ச் செடி நாற்றுகள் நடவுப் பணி திங்கள்கிழமை நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் பிரையண்ட் பூங்காவில் 62-ஆவது மலர்க் கண்காட்சிக்காக மலர் பாத்திகளில், கிங் ஆஸ்டர், மேரிகோல்டு, ஆரணத்திக் கேலம், பேன்சி, டைந்தேஷ் உள்ளிட்ட 25-க்கும் மேற்பட்ட வகைகளில் ஆயிரக்கணக்கான மலர்ச் செடி நாற்றுகள் நடவு செய்யப்பட்டன.

இந்த நிலையில், பெங்களூரு, மும்பை போன்ற நகரங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆறாயிரம் டேலியே மலர்ச் செடி நாற்றுகள், பல்வேறு வண்ணங்களில் பூக்கக் கூடிய ஏழாயிரம் மலர்ச் செடி நாற்றுகள் நடும் பணி நடைபெற்றது. பிரையண்ட் பூங்காவில் இதுவரை 50-ஆயிரத்திற்கும் மேற்பட்ட பல்வேறு வகையான மலர்ச் செடிகள் நடவு செய்யப்பட்டன.